# Challenges Faced by G.C.E. (O/L) Students in the Online Education at Present Context: Special Reference to the Schools in Kandy District

## சமகாலத்தில் நிகழ்நிலைக் கல்வி (Online) மூலமாக க.பொ.த சாதாரண தர மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் "கண்டி மாவட்ட பாடசாலை மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு"

MAF. Rashidha[1], MNF.Nasreena[2]
Department of trilingual[1], Department of Islamic studies[2]
[1]Faculty of Arts, [2]Faculty of Islamic studies & Arabic language South Eastern University of Sri Lanka.
rasidha.2527@gmail.com, nasreena.nawshaddeen@gmail.com

**Abstract:** This article aims to identify the challenges faced by G.C.E. (o/l) students in the online education at present context, to determine whether a difference between males and female students regarding challenges faced during online learning, and to evaluate the effectiveness of online learning in schools in Kandy district from students' perspectives. In this study a sample of 100 students was taken. The technique of simple random sampling for used for this finding. Results revealed that all the students were facing same issues in schools. Specially the G.C.E. (o/l) students facing lot of problems in online study. Online learning cannot produce good results in developing countries like Sri Lanka, where a huge majority of students are not able to access the good internet facility due to technical as well as financial issues. This research addressed the effectiveness of online and challenges faced by students who are taking online classes. As per this finding, 40% of students had not proper internet facility and hey faced lots of internet issues and 30% students were not satisfies with online learning, some students complaining about eye sight issues and body pains by taking online classes on devices. As a result, most of the students are facing same issues and that was major problem for who are going to face G.C.E. (o/l) exam, we hope this study will help for those students surely.

**Keywords-** covid-19, G.C.E.O/L students, online studies, schools

**ஆய்வின் அறிமுகம்**

மனித வாழ்வில் ஆரோக்கியம் மிக முக்கியமானதாகும். மனிதனின் இன்பமான வாழ்க்கைக்கு நோயற்ற வாழ்வு இன்றியமையாதது. ஆனால் ஆரம்ப காலத்தில் மனிதர்கள் பற்பல நோய்களுக்கு ஆளாகி உயிரிழந்துள்ளனர். விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்திலும் மனிதன் நோயின் காரணமாக உயிர் இழப்பதனைக் காணலாம். இதற்கு தொற்றா நோய்களை விட தொற்று நோய்களே அதிக காரணமாக அமைகின்றன. தொற்று நோய்கள் எனப்படுவது ஒருவரிடமிருந்து இன்னொருவரைத் தொற்றிக் கொள்ளும் நோய்களாகும். விஞ்ஞானத்தின் உதவியால் தொற்று நோய்களையும் அவை ஏற்பட காரணங்களையும் கண்டறிந்த மனிதன் அவை பரவாமல் தடுப்பதற்கும் அவற்றை கட்டுப்படுத்தவும் வழிதெரியாமல் திண்டாடுகின்றான்.

உயிரைக்குடிக்கும் கொடிய நோய்களாக தொற்று நோய்கள் கண்டறியப்பட்டுள்ளன. காசநோய், மலேரியா, சிக்கன் குன்யா, டெங்கு, கண்நோய் போன்ற பல நோய்களோடு "கொரோனா" என்னும் புதிய நோய் இணைந்துள்ளது. இது ஒருவகை வைரஸ்ஸினால் ஒருவரிடமிருந்து இன்னொருவரைத் தொற்றிக் கொள்ளும் நோயாகும். கொரோனா வைரஸ்ஸானது 1960 களில் கோழிகளில் தொற்று மூச்சுக்குழாய் அழற்சித் தீநுண்மிகள் முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது நம்மை அச்சுறுத்தி காணப்படும் வைரஸின் பெயர் (SARS – COV-2) Server acute respiratory syndrome coronavirus 2. இந்த வைரஸ் நமக்கு ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நோயின் பெயர் COVID-19, COVI – corona virus D-Disease, 19 இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு ஆகும். இந்த வைரஸ் 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவில் ஊஹானில் வெளியிடப்பட்டது. இதற்கு உலக சுகாதார நிறுவனம் சூட்டிய புதிய பெயர் "கொவிட்-19" ஆகும். அங்க இறைச்சி அங்காடியில் நிறைய பேருக்கு இந்தப் பாதிப்பு கண்டறியப்பட்டது. என்றாலும் வௌவால்களுக்கு பரவி அதிலிருந்து மனிதர்களுக்கு பரவி இருக்கலாம் என கருதப்படுகிறது. இராமசந்திரன் (2020).

கொவிட்-19 என அழைக்கப்படும் இத்தொற்று நோயானது பெரும்பாலானவர்களுக்கு லேசான அறிகுறிகளை மட்டுமே காட்டுகிறது. இருந்த போதிலும் 20 சதவீதமான பேர் அதிக தீவிரமான நோய்க்கு ஆளாகின்றனர். இதில் ஒருவருடைய நோய் எதிர்ப்பு சக்தி எவ்வாறு இருக்கிறது என்பது தான் முக்கியம். இத் தொற்று நோய் கட்டம் கட்டமாக வளர்ந்து வருகின்றது. அதாவது முதலாம் கட்டத்தில் ஓரிருவருக்கு பரவி கட்டுப்படுத்தப்படும். இது பிற நாடுகளுக்கு பயணித்து கொரோனா தொற்று ஏற்படுவதாகும். கொவிட்-19 தொற்று நோயானது ஒருநாளில் அதிகபட்சமாக 150,000க்கும் மேற்பட்ட தொற்றுகளை உறுதி செய்து வருகின்றது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது. மே 2 முதல் உலகெங்கிலும் உள்ள கொவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை தினசரி உயர்ந்து வருகின்றது.

இத் தொற்று நோயினால் இலங்கையின் முழுத்துறைகளும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. எனவே கல்வி நடவடிக்கைகள் கடுமையாக பாதிப்படைந்த நிலையில் அதனை நிவர்த்தி செய்வதன் விளைவாக நிகழ்நிலைக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது.

நிகழ்நிலைக் கல்வி (online) என்பது இணையத்தளத்தின் வழியாக கற்றல் முறைகளை நடத்திச் செல்லும் ஓர் கல்வி முறையாகும். இதற்காக Zoom app, Google meet, Moodle app போன்ற Online மென்பொருள்களை பயன்படுத்தி கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இம்முறையானது தரம் 1 மாணவர்கள் தொடக்கம் பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இலங்கையில் பாடசாலை மாணவர்களுள் கண்டி மாநகரத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்படும் பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் என்ற வகையில் 2021ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்ற இருக்கும் மாணவர்கள் ஏராளமான சவால்களை எதிர்நோக்குகின்றனர். அதனால் நிகழ்நிலையில் தமது கல்வியை தொடரும் இம்மாணவர்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். நிகழ்நிலையில் கல்வி நடவடிக்கைகள் தொடரும் மாணவர்கள் புதிய உக்திகள் வேலைவாய்ப்புக்களுக்கு தேவையான திறன்கள் என்பனவற்றை வளரக்க வேண்டும். Ashraf (2021).

இவ்வாறான சம காலத்தில் கொரோனா நோய் தொற்றுக் காரணமாக மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையக் கூடாது என்ற வகையில் நிகழ்நிலைக் கல்வி நடவடிக்கைகள் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டது. வெளிநாடுகளிலும் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் நிகழ்நிலை மற்றும் தொலைதூர கற்றல் மூலம் தொடர்வதாக குறிப்பிடப்படுகின்றது. Adnan and Anwar (2020). இந்த வகையில் கண்டி மாவட்டத்தினை மையமாகக் கொண்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் தங்களது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர். தங்களது கல்வி முறைகளை மாற்றுவது மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சவாலாக அமைகின்றது. Jaques and Salman (2007). எனவே, பிரச்சனைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளை முன்வைப்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுப்பிரச்சினை**

இதனால் உடல் அசௌகரியங்கள், தொழிநுட்ப சாதனங்களின் குறைபாடு, பொருளாதார பற்றாக்குறை, தெளிவின்மை, மற்றும் பாடசாலைகளில் நேரடியாக கற்பது போன்று கற்க முடியாத நிலையில் இருப்பதோடு நிகழ்நிலைகள் ஊடாக சந்தேகங்களை கேட்டறிந்து தெளிவுடன் கற்க முடியாத நிலையில் மாணவர்களின் கல்வி நிலை சிரமமாக இருப்பதை ஆய்வாளர்களின் அவதானத்திற்குறப்பட்டது. இந்த அவதானத்தின் உண்மை நிலை மற்றும் நிகழ்நிலை கற்கையின் செயற்பாட்டினை மையமாகக் கொண்டு ஆய்வுப்பிரச்சினை அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

- கண்டி மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் தங்களது நிகழ்நிலைக் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எதிர்நோக்கிய பல்வேறு சிரமங்களை, சவால்களை இனங்காணல்.

- எதிர்காலங்களில் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்காத வகையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வினைத்திறனான ஆலோசனைகளை வழங்கல்.

**ஆய்வு முறையியல்**

இவ் ஆய்வினை சிறப்பாக செய்து முடிக்க இவ் ஆய்வானது பின்வரும் ஆய்வுமுறையினூடாக தரவுகள் பெறப்பட்டது. இவ் ஆய்வு அளவுசார் ஆய்வு முறையை பயன்படுத்தி செய்யப்பட்டது. ஆய்வுடன் தொடர்புடைய தரவுகளைப் பெற முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டது. முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, கலந்துரையாடல், அவதானம் மூலம் ஆய்வுகள் திரட்டப்பட்டது. கண்டி மாவட்டத்தில் காணப்படும் பிரதான பாடசாலைகளில் எழுமாறாக 100 க.பொ.த சாதாரண தர மாணவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக இணையத்தளம், அண்மைக்கால பத்திரிகைகள் போன்றன பயன்படுத்தப்பட்டது. இவ்வாறு பெறப்பட்ட தகவல்களில் அளவுசார் தகவல்கள் MS – ACCESS மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள், வரைபுகள் ஊடாக விளக்கப்பட்டுள்ளன. பண்பு சார் தரவுகள் விவரண முறையிலும் விளக்கப்பட்டுள்ளன.

**இலக்கிய மீளாய்வு**

ஒரு ஆய்வினை மேற்கொள்ளும் போது அது தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள பல்வேறுபட்ட முன்னைய ஆய்வுகள் நூல்கள் சஞ்சிகைகள் ஆய்வுக்கு உதவுகின்றன. அதனால் ஆய்வினை சிறப்பாக மேற்கொள்ள இது தொடர்பான தகவல்களை இவற்றிலிருந்து பெற முடிந்தது.

Adnan,M. Anwar,K.(2020) என்பவர்களால் எழுதப்பட்ட "Online learning amid the COVID-19 Pandemic: Students' Perspectives" என்னும் ஆய்வில் கொரோனா தொற்றினால் நிகழ்நிலைக் கல்வியில் மாணவர்களுக்கு கிடைக்கும் நன்மைகள் மற்றும் மாணவர்கள் எதிர் கொள்ளும் சவால்கள் பற்றி விளக்க முனைகின்றனர். Dolmans, D.H.J.M. Grave,W.D ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட "Problem – based learning: Future challenges for educational practice and research" ஆய்வில் நிகழ்நிலைக் கல்வியில் எதிர்காலத்தில் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. Barber, W.De.(2020) என்பவரால் செய்யப்பட்ட "Determinants of students' perceived learning outcome and satisfaction in online during the pandemic of COVID-19" எனும் ஆய்வு இலத்திரனியல்

கல்வி தொடர்பாகவும் நிகழ்நிலையினூடாக உயர்கல்விகளை மேற்கொள்வதிலுள்ள சிரமங்கள் மற்றும் அதற்கான ஆதாரங்களை ஆராய்வதாகவும் அமைகின்றது.

Alper,A. Gulbahar,Y.(2009) ஆகியோரால் மேற்கொய்யப்பட்ட "Trends and issues in online educational technologies: A review of recent reseach in TOJET" என்னும் ஆய்வில் நிகழ்நிலைக் கல்வியின் போது எதிர்நோக்கும் தகவல் தொழிநுட்ப பிரச்சினைகள். மற்றும் அதில் காணப்படும் நவீனத்தன்மை பொறுத்தமானதா என்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

Dag,F. Gecer,A.(2009) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது "Relations between online learning and learning style" எனும் தலைப்பில் நிகழ்நிலைக் கல்விக்கும் சாதாரண கல்வி நடைமுறைக்குமான தொடர்புகளை ஆராய்வதாக அமைகின்றது. இவ்ஆய்வுகள் இலக்கிய மீளாய்விற்காக உற்படுத்திய ஆய்வுக்கட்டுரைகள். எமது ஆய்வானது இலங்கையின் கண்டி மாவட்டத்தை மையப்படுத்தி அமைந்துள்ள போதிலும் பொதுவாக ஆய்வாளர்களால் இவ் எண்ணக்கருவில் எழுதப்பட்ட ஆய்வுகளை மீளாய்வு செய்வது எமது ஆய்வை சிறப்பாக மேற்கொள்ள உதவியாக அமைந்தது.

**ஆய்வுப் பிரதேசம்**

இவ்வாய்வுக்கான ஆய்வுப்பிரதேசமாக காணப்படுவது இலங்கை மத்திய மாகாணத்தின் தலைநகரமான கண்டி மாவட்டமாகும். இங்கு காணப்படும் பாடசாலை மாணவர்களது தரவுகள் பெறப்பட்டுள்ளது. இப்பிரதேசமானது $7^0$ 15" வட அகலாங்கிலும், $80^0$ 45" தென் அகலாங்கிலும் அமைந்துள்ளது. இலங்கையின் மத்திய மாகாணத்தின் தலைநகரமான கண்டி சுமார் 1,940$Km^2$ சதுர பரப்பளவைக் கொண்டுள்ளதோடு 23$Km^2$ நீர் வளத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கண்டி மாநகரம் சுமார் 1,369,899 பேர் சனத்தொகையைக் கொண்டுள்ளது. இங்கு சராசரி வெப்பநிலை $23^0$c - $26^0$c வரையிலும், மழை வீழ்ச்சி 79mm – 250mm வரையிலும் நிலவுகின்றது. கடல் மட்டத்திலிருந்து 1600அஅ உயரத்திலும் அமையப் பெற்றுள்ளது. (மாவட்ட செயலாளர் பிரிவு, 2019)

**பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

இவ் ஆய்வின் நோக்கத்தை முடிவிற்கு கொண்டுவரும் முகமாக பின்வரும் அம்சங்கள் கருத்திற் கொள்ளப்பட்டது. அதில் கண்டி மாவட்டத்தில் காணப்படும் 32 பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மாணவர்களில் ஏரத்தாள 100 மாணவர்கள் எழுமாறாக தெரிவு செய்யப்பட்டு நிகழ்நிலைக் கற்கை பற்றிய இவ்வாய்விற்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். அத் தரவின்படி 63% ஆன பெண் மாணவர்கள், 37% ஆன ஆண் மாணவர்கள் நிகழ்நிலைக் கற்கையில் பங்குபற்றுகின்றனர். அத்தரவின்படி பெண் மாணவர்களின் நிகழ்நிலைக் கற்கையின் பங்குபற்றுதலானது அதிகமாக காணப்படுவதோடு ஆண் மாணவர்களின் பங்குபற்றல் நிலையானது மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுவதை இவ்வாய்வை

மேற்கொண்ட ஆய்வாளர்கள் கண்டறிந்தனர். அத்தரவினை கீழுள்ள வரைபு தெளிவுபடுத்துகிறது.





*Figure 1*

மேலும் தரவுகளின்படி நிகழ்நிலை கற்கையில் மாணவர்களின் ஆர்வ நிலையை நோக்கினால் 10% ஆனவர்கள் ஓரளவு ஆர்வமுள்ளவர்களாகவும், 35% ஆனவர்கள் நிகழ்நிலை கற்கையின் மிக்க ஆர்வமுள்ளவர்களாகவும், 55% ஆன மாணவர்கள் நிகழ்நிலை கற்கையில் ஆர்வமில்லாதவர்களாக உள்ளனர். இதனை பின்வரும் வரைபு மூலம் தெளிவாக நோக்கலாம்.





*Figure 2*

இந் நிகழ்நிலை கற்கை மூலம் மாணவர்கள் எதிர் கொள்ளும் சவால்களில் இணைய சிக்கலாக 40% ஆன மாணவர்களும், 30% தெளிவின்மையும், பொருளாதார குறைபாடாக 20% ஆன மாணவர்களும், 7% தொழிநுட்ப குறைபாடுடனும், 3% ஆன மாணவர்கள் உடல் அசௌகரியத்திற்கு உட்படக்கூடியவர்களாக உள்ளனர். என்று தரவுகள் பெறப்பட்டது. இதனை கீழ் உள்ள வரைபு எடுத்துக்காட்டுகிறது.





*Figure 3*

மேலும் இந் நிகழ்நிலை கற்கையினால் மாணவர்களின் சுகாதாரமானது மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அதாவது 30% ஆன மாணவர்களின் கண் பார்வையானது குறைபாடுடையதாக காணப்படுகின்றது என்று தரவுகள் பெறப்பட்டது. மேலும் தலைவலியினால் 35% ஆன மாணவர்கள் அவதிப்படுவதோடு 20% ஆன மாணவர்கள் முதுகுவலியுடனும் 15% ஆன மாணவர்கள் ஏனைய கொண்ணிலைப் பிரச்சினைகளுடன் காணப்படுகின்றனர்.





*Figure 4*

**முன்மொழிதல்கள்**

- இலத்திரனியல் சாதனங்களை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- இணைய வலையமைப்புக்கான வசதிகளை மாணவர்களுக்கு அமைத்துக் கொடுத்தல்.
- முறையான கொண்ணிலையில் அமர்வதைப் பற்றி மாணவர்களுக்கு அடிக்கடி விழிப்புணர்வு செய்தல்.
- நிகழ்நிலை கற்கையின் போது ஒரே அமர்வில் கற்கையை மேற்கொள்ளாமல் மாணவர்களுக்கு இடைவேளைகளை வழங்கல்.
- இணைய செலவுக்காக மாதாந்த கொடுப்பனவு வழங்கல்.(புலமைப்பரிசில்)

- Zoom, Google meet மென்பொருட்களின் நிகழ்நிலை கல்வியை மேற்கொள்ள இணைய செலவுகளை குறைத்தல்/ இலவசமாக வழங்கல்.
- மாணவர்களை சுயகற்றலுக்கு ஊக்குவித்தல்.
- கற்பதற்கு சிரமப்படும் மாணவர்களுக்கு தனிப்பட்ட வகுப்புக்களை மேற்கொள்ளல்.

இவ்வாறான செயற்றிட்டங்களை முன்னெடுப்பதினூடாக சமகால நிகழ்நிலை கற்கையின் மூலம் க.பொ.த.சாதாரணதர மாணவர்கள் முகங்கொடுக்கும் சவால்களை முறையடித்து க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் தமது கல்விச் செயற்பாட்டையும் சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களையும் கடைபிடிக்கக் கூடியதாக இருக்கும்.

**முடிவுரை**

எனவே, விஞ்ஞானம் வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்திலும் மனிதன் நோயின் காரணமாக உயிர் இழப்பதனைக் காணலாம். அந்த வகையில் கொவிட்-19 என அழைக்கப்படும் இத்தொற்று நோயானது எண்ணிலடங்காத உயிர்களைக் குடித்து, தற்போது தீவிர நிலையை அடைந்துள்ளதோடு ஏராளமான மக்கள் அவதிப்படுகின்றனர். அத்தோடு சம காலத்தில் கொரோனா நோய் தொற்றுக் காரணமாக மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் பாதிப்படையக் கூடாது என்ற வகையில் நிகழ்நிலைக் கல்வி நடவடிக்கைகள் பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் கண்டி மாவட்டத்தினை மையமாகக் கொண்ட பாடசாலைகளில் க.பொ.த சாதாரண தர மாணவர்கள் சமகாலத்தில் நிகழ்நிலைக் கல்வி (online) மூலமாக எதிர் நோக்கும் சவால்கள் என்னவென்று கண்டறிந்து மற்றும் அதற்கான காரணத்தை அடையாளப்படுத்துவதனை நோக்காகக் கொண்டே இவ்வாய்வு நகர்ந்துள்ளது. ஆய்வுப்பிரதேசமான கண்டி மாவட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் க.பொ.த சாதாரண தர மாணவர்களில் எழுமாறாக 100 மாணவர்கள் தெரிவு செய்து அவர்களிடம் வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் அவதானம் மூலம் பெறப்பட்ட தகவல்களினை கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் கண்டி மாவட்ட பாடசாலை மாணவர்களின் நிகழ்நிலைக் கல்வி நிலையில் பங்குபற்றலில் பெண்களின் வீதம் அதிகமாகவும் ஆண்களின் வீதம் குறைவாக காணப்படுவதோடு நிகழ்நிலை கற்கையில் மாணவர்களின் ஆர்வநிலையையும் கண்டறியப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் மாணவர்கள் எதிர்கொள்ளும் சவால்களில் இணைய சிக்கல், உடல் அசௌகரியம், தெளிவின்மை, தொழிநுட்ப குறைபாடு மற்றும் பொருளாதார குறைபாடு என்பவற்றை குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் கண்டி மாவட்ட பாடசாலை மாணவர்களின் நிகழ்நிலைக் கல்வியில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. ஆகவே கண்டி மாவட்ட மாணவர்களில் க.பொ.த சாதாரண தர மாணவர்களிடையே நிகழ்நிலைக் கல்வியில் பங்குபற்றல் அவர்களின் கற்கும் திறனை அதிகரித்து மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இவ்வாய்வு பக்கபலமாக இருக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**உசாத்துணைகள்**

Adnan, M., & Anwar, K, (2020), Online learning amid the COVID-19 pandemic: Students' perspectives. *Journal pedagogical Sociology and psychology*.

Arun Muthu. (2020). வேகமாக பரவும் கொரோனா வைரஸ். Accessed on: 02-02-2021. Retrieved from.

Jaques, D., & Salman, G, (2007), Learning in groups, A handbook for face to face and online environments 4th edition, London; Routledge.

Mohmoona Ashraf, Abaid Ullah, Shanza Ashraf and Sajid Ahamed, (2021), Jounalpedagogical Sociology and Phycology, volume 3, issue 1.

Nelson Mandela. (2019). Disadvantages of E- Learning. Accessed on: 02.01.2021. Retrieved from: https://e-student.org/disadvantages-of-e-learning/

https://tamil.drivespak.com/off-beat/coronavirus-outbreak-us-president-donald-trump-gives-nod-to-tesla-gm-and-ford-to-make-ventilators-021408.html

இராமசந்திரன் நிர்மலன், (2020), இலங்கையில் இணையத்தளத்திலுள்ள சவால்கள், Accessed from: 21.01.2021. Retrieved from: http://thinakkural.lk/article/58828


ISBN 978-624-5736-14-0